DIGITIZED

O-,892:mk8,1
N09
58659

உ

ஸ்ரீராமஜெயம்

ஐந்தாம்வேதமாகிய

ஸ்ரீ மஹாபாரதத்தில் ஓர்பாகமாகிய

இலக்ஷமணாதேவி

மாலையிடு நாடகம்.

இஃது.

விக்கிரவாண்டிசாலை

கிருஷ்ணபிள்ளை அவர்களால்,

இயற்றியதை.

கூடலூர்-சேடபாளையம் மதுரா

சங்கிலிகுப்பத்தில்இருக்கும்

ரிசல்டு இஸ்கூல்

எஸ்-முருகேசஉபாத்தியாயரவர்களால்

பற்பல ஏட்டுப்பிரதியை கொண்டு

சீர்திருத்தப்பட்டு

கூடலூர் புஸ்தகஷாப்

க-மு-பொன்னுசாமிபிள்ளை அவர்கள்

வேண்டுகோளின்படி

உருத்திரமங்கலம்,

ஷ. கோவிந்தராஜுமுதலியாராலும்

மயிலை.

திருவேங்கிடமுதலியாராலும்

சென்னை.

ஸ்ரீ மாதவவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

ரிஜிஸ்டர்காபிரைட்.

1909.

இதன் விலை அணா—௪.

58657
894.812
1760

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்.

லக்ஷ்மணாதேவி மாலையிடு
நாடகம்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 20 OCT 1909 ... MADRAS



விநாயகர் விருத்தம்.

திருமுகமதியும்கொன்றை செஞ்சுடர்முடியிலங்க
தருமணிமாலைபூண்டு சதுர்ப்புஜம்துதிக்கையாட
அருமையாசிவகணங்கள் அமரர்கள்முனிவர்வாழ்த்த
கரிமுகமுடையதேவன் கணபதிவருகின்றாரே.

விநாயகர் கொலுவுக்கு வருகிறதரு.

சுந்தரக்கணபதி வந்தாரே வேடிக்கையாக
சுந்தரக்கணபதி வந்தாரே சுந்தரக்கணபதிவந்தார்
சொல்லிங்கதைக்குகந்து சந்தோஷமாக-இந்த
சபைக்கியருள்புரிய (சுந்தர)

சோதிமணிமுடியிலங்கப் பணிகுலுங்க
தம்பிகைமுன்பாகநுலங்க ஆதிமூலாதரன்
ஆகுவாகனமேறி (சுந்தர)

வேதங்கள்சூழ தேசமெங்கும் வேணுநாதங்கள்பாட
ஆவலாய்அருள்செய்யும் நாதன் திவ்யபாதன் (சுந்தர)
சாலைகரில்வாசன் சாம்பன் லக்ஷ்மணாதேவி மாலையிடுங்
கதைக்கிவந்துஅருள்புரியும் சுந்தரக்கணபதிவந்தாரே (வேடி)

பொது—வசனம்.

இந்தப்பிரகாரமாக விநாயகமூர்த்தி கொலுவாயிருக்கும்போது திரியோதனமகாராசன் வாசலதிகாரியாகிய கட்டியக்காரன்வருகிற விதங்காண்க.

கட்டியன் விருத்தம்.

கட்டிசல்லடம்முங்கட்டி சரிகைபாகையுமிலங்க
வல்லயம்சூழிவாங்கு வரிசையாவாளுமேந்தி
சொல்லிய துரியமுசன் செங்கோலும்கையிலேந்தி
கல்மீசமுறுக்குமீசை கட்டியன்வருகின்றாரே.

வசனம்.

அகோகேளப்படி என்றால் அஸ்தினாபுரி பட்டணத்தை தகந்தோடும் அரசாக்ஷிசெய்துவராநின்ற துரியோதனமகாராசனும்நல்லம்மானாகிய சகுனிமாமனும் கர்னன் சல்லியன் அஸ்வத்தாமன் பீஷ்மாச்சாரி துரோணாசாரி கிருபாசாரி அனேக ராஜராஜாக்களும் புடைசூழ்ந்தக்கதாக கொலுவுக்கு வருமுன்னே நாம் சிம்மாதனம் அலங்காரம் செய்யும்படி கொலுவாகிறேம்.



திரியோதிரன் கொலுவிருத்தம்.

வீராதிவீரரெல்லாம்பணிந்துசூழ விலையில்லாமணிபணிகள் அலங்கரித்து. பாருதிபதியாகவந்ததீரன் பம்பைமணிமுறசுடங்காபேரியாட,யேகாதிபதியானதம்பிமாரும் இன்பமுறுசகுனிகர்னன்படைநெருங்க, சூராதிசூரகெம்பீரதீரன் துரியபதிகொலுவுக்குவருகின்றாரே.

திரியோதிரன் கொலுவுக்குவருகிற

தரு-இ-ம-நாட்டை-ஆதிதாளம்.

இராஜராஜேந்திரன்-ராஜன் திரியோதிரன்
ராஜன்கொலுவதாகிறான் நமணிதவரில்லா-ராஜன்
தேசதேசகைப்பணம் செலுத்தும்செங்கோலிலங்க

(கருளல்லது முடிக்கு.)

தேறணியும்பரிவாறணம் பெருகிய
எரணி படையுடன்
தாரணியஞ்ச (ராஜராஜேந்திரன்

சக்கறவட்டகுடையும் தழையவந்துகவிக்க
தரணியரசரெல்லாம்பணிந்து கறம்குவிக்க
உக்கிரசூலமும்வேலும் கனதண்டமும்பிடிக்க
உலகம்கிடுகிடென்ன முரசபேரியடிக்க

(முடிக்கு) ஒதியமணிமுடி சோதிமிகுத்திட
தீதிலர்தகுருவேதியருடனே (ராஜராஜேந்திரா)
தம்பிமாரும்சகுனி தமையன்கர்னனுங்கூட்
தளபதி மதிமந்திரி சகலயரசர்காட
அரம்பையூர்வசியென்ன பாதமாதர்களாட
நாகசின்னம்பூரியும் நமரிசின்னங்கள்பாட
(முடிக்கு) நத்தியகாவலர் கத்திகளேந்திய
அத்திலும்வருசேவே பத்தியதாக (ராஜராஜ)
அண்டமளாவியு ஆலவக்கொடிப்பறக்க
அவனிக்கதிபதியாய்வந்து புவிப்பறக்க
கண்டசாமணியும் பணிகள்அதாகிரக்க
கற்பகத்தருவிந்திரபோக செல்வம்பெருக
(முடிக்கு) கல்விசிறேன்மணி செல்வியைதந்திட
சொல்மொழி என்னியே நல்மனதாக
ராஜராஜேந்திரன் ராஜன்துரியோதிரன்

துரியோதிரன்—விருத்தம்.

சகுனியேஎனதுமாமா சகலரும்சொல்லக்கேளீர்
நவமணிஎனதுசெல்வி லக்ஷ்மணாதேவிதானும்
வெகுவிதாயெவர்னக்காலம் விருதவாய்இனியிருக்க
தருமமோவொருவருக்கு தந்திடவிதம்சொல்வீரே.

துரியோதனன்—வசனம்.

கேளும் மாமா சகுனி அண்ணாகர்னமகாராசனே சென்மாந்திரபுண்ணியத்தினாலே எனக்கு உதித்தசெல்வியான லக்ஷ்மணாதேவி எவ்வர்னபருவகாலமான படியினால்அபகுழந்தையையொருராஜகுமாரனுக்கு பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்காமலிருக்க ஒண்ணாது ஆகையால் யெனதுபுத்திர செல்வத்தையாருக்கு கொடுக்கலாம்அறிந்துசொல்லுங்கள் பெரியோர்களே.

சகுனி—விருத்தம்.

வண்மைசேர்மதிகுலத்து மன்னர்மன்னவனேகேளாய்
பெண்மனதறிந்திடாமல் பேசவும்பலனுண்டாமோ
கண்மணிதனையழைத்து கருத்தைநீயறிந்தாலிப்போ
உண்மையாமணம்செய்விக்கயுறுதியுண்டாகும்காணே.

சகுனி—வசனம்.

கேளும் துரியோதனமகாராஜனே பெண்ணுடையமனதையறியாமல்யொருயோசனையுஞ் செய்யக்கூடாது ஆகையால்உனதுகுமாரத்தியை அழைப்பித்து அதினுடையமனக்கருத்தை அறிந்துக்கொண்டுநடத்துவது நலமாகும் துரியோதனமகாராசனே.

துரியன்—வசனம்.

அப்படியே உங்கள்மனது பிரகாரமே எனதுகுமாரத்தி கருத்தையறியவேண்டும் அடிபணிப்பெண்களா நீங்கள்சுறுதியாக அரண்மனைக்குச்சென்று எனதுகுமாரத்தியை நாம் அழைத்தோமென்று அதிகசீக்கிரத்தில் அழைத்துவாரும் பணிப்பெண்களா.

பொது—வசனம்.

இந்தப்பிரகாரமாக துரியோதனன் குமாரத்தி லக்ஷ்மணாதேவி தனதுதந்தையைக்காண நவமணிபணிகள் அலங்கரித்துகொண்டு கொலுவுக்குவருகிற விதங்காண்க.

லக்ஷ்மணாதேவி—விருத்தம்.

சகலசம்பன்னரான தந்தையும்அழைத்தசேதி
புகலவும்தாதிமார்கள் பூரித்துமனங்களித்து
பலநவபணிகள்பூண்டு பாரெல்லாம்மதிசெயிக்க
நகையொளிவதனரூபி லக்ஷ்மணாதேவியும்வருகின்றாளே

தரு.

சந்திரகுலத்தில்வந்த சுந்திரலக்ஷ்மணாதேவி
தையல்சிகாமணிவந்தாள் நல்லநடைகொடியிதைய

மடைமயிலாகி கைதயல் — கொகணிவந்தாள்
செந்தாரிலர்தமின்ன — சேலைப்பளபளென்ன
(முடுக்கு) சித்திரம்போலவே — ரத்தினபூஷணி
நெத்தியில்கட்டியும் முத்தாபிலங்கிட — (சந்திரகுலத்தி)

பேடைநடைநடந்து — வாடைசவ்வாதணிந்து
பெண்கள்சிகாமணி — வந்தாள்
நல்லகிஞ்சியகிளிமொழி — நஞ்சிதமாகவே
பெண்கள்சிகாமணி — வந்தாள்
யீடிலீலந்திரு — யிவளேறதிஎன்னவே
(முடுக்கு) இன்னிலமேர்சிய — பொன்னிறம்போலவே
மின்னிடைமாது உன்னிதமாக — (சந்திரகுல)

முத்துபளபளென்ன — றத்தினப்பணிகளாட
முல்லைநகைதுலங்கவே — நல்ல
உச்சிதமாமுலை — கச்சையிருக்கிய
முல்லைநகைதுலங்கவே — சித்திரக்கம்மல்
சிமிக்கிவைத்திழைத்த — மாமணிகள்
(முடுக்கு) செங்கதிர்கடரென — கங்கணகடகமும்
பங்கியிலங்கியமங்களமாக — (சந்திரகுலத்தில்வந்த)

பாசமானதந்தைதன்னை — நேசமாய்வழக்குமுன்னே
பகரும்விதமறிய — நல்லசேதிகள்
கூறியேதாதிகள்குழுவே — பகரும்விதமறியவே
வாசமலர்கள்சூடி — வண்டுகீதங்கள்பாடி
(முடுக்கு) மைக்குழலரிய — சக்கரைமாமொழி
பக்குவமாகவே மிக்கவேகூறிட — (சந்திரகுல)

லக்ஷ்மணாதேவி—விருத்தம்.

மாதுதான்சபையில்வந்து மகிழ்வுடன்தந்தைதன்னை
ஏதுகாரியமாயென்னை இட்சணம்மழைத்தசேதி
ஓதுவீரென்றுசொல்லி உத்தமியாளும்அப்போ
பாதமேபணிந்துமந்தபாவையும் வணங்குவாளே.

துரியோதனனுக்கும்-லக்ஷ்மணாதேவிக்கும்-தர்க்கம்-தரு.

சந்திரகுலத்தில்வந் — தென்னையாமலர்கையா
தந்தையே — யதன்சரணம்

சிந்தையில்அன்பாக — எந்தனையழைத்ததை
(முடுக்கு) தெரியும்படி — பரிவாகவே
அடியாளிடம்உரைசெய்குவீர் — (சந்திரகுலத்தில்)

துரியோதனன்-தரு.

அரிதானயென்மகளே — குலமணியேமலரணியே
அம்மணிநீவாழி — பரிவாகஉனக்கம்மா
திருமணம் — செய்விக்க
(முடுக்கு) மதமாகிய — கலைமேந்து
கூடியவிதமாகுமோ — அரிதானயென்மகளே

லக்ஷ்மணாதேவி தரு.

கற்பனைஎப்படியோ — அய்யாமலர்கையா
கருத்தின்படிநடக்க — அற்புதமெண்ணமல்
இடறாது — சொல்வேனோ
(முடுக்கு) அட்வாயதில்படவே — மனந்திடமாகவே
நடவும்கற்பினை — எப்படி

துரியன்-தரு.

ஆருக்குமுன்னைக் — கொண்டு
குலமணியே — மலரணியே
அளித்துமணங் — களிப்பேன்
பாருக்குள்உனக்கேத்த — நாயகன்காணமல்
(முடுக்கு) பரியின்அமே — தெரிவித்தேனே
சரியொத்தவ — றரிவித்திட
பிரியத்துட — னுரைசெய்குவாய்-ஆருக்குமுன்னை

லக்ஷ்மணாதேவி-தரு.

என்னைபடைத்த — யீசன்
என்னையா — மலர்கையா
எனக்கொரு — நாயகனே
தன்னைப்படைக்காமல் — இருப்பதுண்டோசொல்லும்
(முடுக்கு) தனசாலியை — மணம்வாடவும்
கனமோயிது — யெனமோஎன்னை

துரியன்-தரு.

அறஞ்சித — என்மகளே
குலமணியே — மலரணியே

நான்யெந்தராசனுக்கு — மெஞ்சமகிழ்ந்தாமே
தந்திடுவே — நம்மா
(முடுக்கு) மேருகவே — சிராயவதை
பாராய்வெகுசிராய் — ரஞ்சிதஎன்

லக்ஷ்மணாதேவி-தரு.

ஆரைகுறித்துச் — சொல்லுவேன்
மியனையாமலர் — கையா
அவனியரசர்க்குள்ளே — பேரையும்
உரையும்நான் — கண்டதில்லையே
(முடுக்கு) பேரும்பல் — நேரும்படி
கூறும்வினை — நீரும்-ஆரைக்குறி

துரியன்-தரு.

மங்கைசிரோன்மணியே — குலமணியே
மலநமணியே — மனதின்படிநடக்கதிங்கள்
குலத்துக்கு — மானம்வராதம்மா
(முடுக்கு) திரமாகவேயொரு — யோசனைதருவாய்
மணம்புரிவா — மங்கை

லக்ஷ்மணாதேவி—விருத்தம்.

எந்தையேசொல்லக்கேளாய் யெனக்குமேசுயஞ்சாட்டித்து
வந்திடசெய்தாலந்த வரிசைமன்னவருக்குள்ளே
அந்தமுள்ளவரைக்கண்டு அழகியமாலைசூட்டி
சந்தோஷம்பெருகிவாழ்வேன் சம்மதம்மிதுதானைய்யா.

வசனம்.

கேளும்எனது தந்தையே எனக்கானல் யிப்பவே சுயமரம்சாட்டித்து தேசத்திலுள்ள ராஜகுமாரர்களை இவ்விடம்வரும்படியாச்செய்தால் அவர்களை என்கண்ணால் பார்வையிட்டு எனக்குதகுந்தநாயகனை விவாகம் செய்துக்கொள்ளுகிறேன் என்தந்தையே.

துரியன்-விருத்தம்.

அப்படிதானேசெய்வேன் அரண்மனைதன்னில்சேரும்
இப்படிசெய்வேனென்று என்மாமாசகுனிகர்ண
ஒப்பினேன்சுயமும்ஓலை உலகெல்லாம்மறியச்செய்து
செப்புவீர்யெந்தனுக்கு சிந்தையும்களிக்கத்தானே.

வசனம்.

வாரும் மாமா சகுனி அண்ணா கர்ணமகாராசனே நமதுகுமாரத்திக்கு சுயமரம்சாட்டி குருதேசத்து ராசர்களுக்கெல்லாந் தெரிவித்துஅவரவர குமாரவற்கத்துடன் சுயம்வரகலியாணத்திற்குவரும்படிசெய்யவேண்டும் மாமாவே.

சகுனி—விருத்தம்.

மருகனேசொல்லக்கேளும் மனதினின்படியேயிப்போ
உருமையாநிருபமொன்று யுலகெலாமறியத்தானே
பிரியமாயெழுதியானும் பிலமதாயனுப்பிவிட்டேன்
வருகிறார்அரசரெல்லாம் மகிழ்ச்சியாய்பார்த்திடாயே.

வசனம்.

கேளும் எனது மருமகனாகிய துரியோதன மகாராஜனேஉன்மனதின்படியே நிருபம்எழுதி அனுப்பினேன் அந்தந்த அரசர்களெல்லாம் வருவார்கள் அவரவர்களுக்கு முயற்சிசெய்து கொண்டிரும் யோதனா.

பொருது—விருத்தம்.

அரசருக்கு நிருபம்தது எழுதிவிட்டு அரண்மனையில்போய்சேர்ந்தான், துரியராஜன் விறுதுடனே தூதர்சென்றுஉலகமெல்லாம்விரைந்தோடிநிருபமதை காட்டிக்கொண்டு துருசுடனே, துவாரகையில்வருதம்போது துய்யவொளி சாம்புவனும் கண்டுகொண்டு, வரிசையுடன் ரதமேறி பாதைக்கூடி வருகிறான் துரிதமுடன் வருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக துரியன்கொடுத்த நிருபத்தைகொண்டுபோய் குருதேசத்து இராசற்கட்குக்காட்டி துவாரகாபுரியில்வந்து சாம்புதேவனுக்குநிருபத்தைகாட்டின உடனேரதம்யேறிசாம்புதேவன்அஸ்தினாபுரி மார்க்கம் வருகிறவிதம் காண்க.



சாம்புவதேவன் வருகிற

விருத்தம்.

பகலவன்கிரணம்சோதி பணிகளும் அலங்கரித்து
தகதகன்றுடைபூண்டு தனிரதம்தன்னிலேறி
அகமகிழ்மனதிலெண்ணி யஸ்தினாபுரியைநாடி
ஜெகமெல்லாம்நடுங்க சாம்புவதேவனும்வருகின்றானே.

த ரு.

தேசம் நடுங்கவந் — தரசர்பணியும்
சாம்புவதேவனிதோ — வந்தானே
நல்லரதத்தி லேறியே — தேவனிதோ வந்தானே
வாசவனும் களிக்கவந்தான் — செம்பிரத்திற்
(முடுக்கு) வரிசிலைவாளையும் — பலமுட்டேணந்தியே
பரிவுடன், அஸ்தினாபுரிதனை நாடிய — (தேசம்-நடுங்கவந்)
வாகுவல்லயம் மின்ன — வச்சிரபுஜங்கள் துன்ன
மகரக்கொடியிலங்கவே — நவமணிகளழுத்திய
மகரகொடியிலங்க — நாகரீகவதன
நவரத்தினமணி — அன்ன
(முடுக்கு) ரஞ்சிதமாகிய — வஞ்சிமயங்கிட
நெஞ்சமகிழ்ந்துமே சஞ்சலமில்லாமல் — (தேசம்-நடுங்க)

கரிபரிசேனைகள் — பரவிநெருங்கிடவே
கடிகிப்புயணமாகியே — நல்லசுயவரம் நாடிய
கடிகிப்புயணமாகியே — வரிசிலைவேந்தர்கள்
வந்தவரை — யெல்லாம்
(முடுக்கு) வாட்டியே — அவர்களை ஓட்டியபின்னையும்
கூட்டியேவீரம் காட்டுவேனென்றுமே — (தேசம்-நடுங்க)
வடிவாதுவாரகைவிட்டு — அடவாய்
அஸ்தினாபுரிமாநகர் — தன்னைநாடியே
மிக்கதேவரும்மெச்ச — மாநகர்தன்னைநாடியே
கடலொலிபேரிகைகள் — சின்னமுழங்க
(முடுக்கு) சந்தமும்பெருகியே — விந்தையே
லக்ஷ்மணா — சுந்திரமதியவே
சிந்தையி லெண்ணியே — (தேசம்-நடுங்க)

சாம்புவன்—விருத்தம்.

சந்தோஷம்பெரிகிவந்த தளபதிசொல்லக்கேளாய்
அந்தமாநகரைவிட்டு அஸ்தினாபுரியைநாடி
வந்துமேஅழகுபூங்காவனமதை கண்டறிந்தோம்
மிந்தநல் விடமிருந்து இன்பமாயேகலாமே.

வசனம்.

கேளும் தளபதியே துவாரகாபுரியைவிட்டு அஸ்தினாபுரி சமீபத்தில் வந்துவிட்டோம் இந்ததிவ்ய பூங்காவனத்தில் சற்றுநேரமிருந்து இளப்பாறி போகலாம் வாருங்கள் தளபதியே.

பொது—விருத்தம்.

வந்தவர்கள்வனத்திலே யிறங்கிப்பார்த்து
மனமகிழ்ந்துதானுமே யிருக்கும்போது
அந்தமுள்ள அத்திபுரம் தன்னையாளும்
அரசனிட புத்திரியும் ஆவலாக
சிந்தையது தான்மகிழ்ந்து தாதியோடும்
சிங்கார வனம்பார்க்க லக்ஷ்மணாதேவி
சந்தோஷத்துடனே பாங்கியோடும்
சதுருடனேதான் நடந்துவருகின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக ஸ்ரீ கிருஷ்ணதேவருடையகுமாரனான சாம்புவதேவன் மந்திரிமார்களுடனே கூடிக்கொண்டு நந்தவனத்தில்வந்திறங்கி இருக்க அப்போது லக்ஷ்மணா தேவியானவள் தாதிமார்களுடனேகூடிக்கொண்டு நந்தவனம் பார்க்க வருகிறவிதம் யெப்படியென்றால்.

லக்ஷ்மணாதேவி நந்தவனம் போகும்

விருத்தம்.

செகத்தினிலழகுமிக்க செல்வதாதிமாரேகேளாய்
யகந்தனில்மகிழ்ந்து அன்பாய் அருமைபூங்காவுக்கேகி
சுகந்தமாமலர்கள்சூடி துலங்கியவனவேடிக்கை
மகிழ்ந்துமேபார்த்துநாமும் மகிழ்ச்சியாய்வருகுவோமே.

வசனம்.

கேளுங்கோள் எனதுதாதிமார்களே நாமெல்லோரும்சிங்காரவனம்சென்று அதினுடைய வேடிக்கைகளேதங்களைப்பார்த்துவிளையாடிக்கொண்டு வருவோம் பாங்கிமார்களே.

லக்ஷ்மணாதேவி தரு.

தங்கசிலேன்மணியே யழகுள்ளசரியானதாதிமாரே
சிங்காரவனம்பார்க்க என்னம்மகாசேயிழையே

வாருங்கோள் பச்சபுரு அன்னமே
யென்பைங்கொடி தாதிமாரே
உச்சிதமாவனத்து விந்தைஉன்னிதம்
என்றுசொல்வே ஆடைசரிகைமின்ன
மார்பினில்சந்திரஹாரம் தளதளென்ன
வாடைபரிமளிக்க எந்தன்வடிவானதாதிமாரே
செவ்வல்லிசெண்பகமும் கோங்குசீறுள்ளசாமந்தியும்
இவ்வனம்மென்னசொல்வேன் எந்தன்அழகுள்ளதாதிமாரே
கொஞ்சுதடிகிளிகள் ஒயிலோகுயிலோசைபாடுதடி,
வஞ்சியே இதைப்பாரும்
யாதோமயில்விளையாடுதடி நந்தியழகைப் பாரடி
வனவிந்தைரஞ்சிதம் கொஞ்சுதடி.
மதிமுகதாதிமாரே பூஞ்சோலைகள் வளரும்துளிறைப்பாரடி

பொது—வசனம்.

அகோதெப்படி யென்றால் லக்ஷ்மணாதேவியும் தாதிமார்களும் கூடிக்கொண்டு வனசிங்காரங்களை பார்த்துக்கொண்டிருக்கும்போது சாம்புதேவன் கண்டுமோகம்கொண்டு இவளாரென்று சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

சாம்புவதேவன்—தரு.

சித்திரபதுமைப்போலே யெத்தனைசோதிப்பிரகாசி
சேயிழைஇவளாரோ நான்-என்னசெய்வேன்
கர்த்தனேயிவளைநான்காணக் கண்கள்கூசுதே
கதிர்மணிபணிகளும் சொலித்துமிகவீசுதே
முடிக்கு பத்மமாத்துப் பணிகுலுங்க
பாவையேமாமதி முகமிலங்க
முத்துமாமணி துலங்கவே
முன்னும்பின்னும் பணித்துலங்க
எத்திசைஎட்டும் மதித்ததோ
வித்தகனென்னமோ விதித்ததோ.
சுத்ததங்கமா வகுத்ததோ
பத்தினிஎங்கும் துதித்ததோ
பங்குவமைக்குழல் சக்கநமுக்கனி சித்தி
அறிவையிவளோ ரதியாரென்றே நானறியேன்
அணைவோமென்று நெருங்க அரசிமனதறியோம்

பெருகொளிமாதுதன்னை யிணங்காமலேப்பிரியேன் இட
பெண்ணால் சுகம்கிடைக்க
போகுமோ நானறியேன்

(முடுக்கு) கரும்புவில்மதன் பூட்டிடவே
காமசரங்களை மீட்டிடவே
அரும்புமலர்களை நாட்டிடவே
அங்கமுழுதும் மேல்வாட்டிடவே
இரும்புமனதாகிய குயிலோ
ஏகபோகமனா தாகியமயிலோ
அரும்போபல் வரிசைகளொளிவோ
அண்டத்தில் வாழ்கின்றகுயிலோ
அற்புத நிற்புத நற்பதபொற்பத (சித்திரப்பதுமை)

கொங்கைகொடம் நிறட்டிக்கொண்டு
வாடிக்கண்ணாட்டி கொஞ்சும்கிளிமொழியே
கூடுவர்லீலைக்காட்டி பொங்குமுடன் மன்மதன்
பூஞ்சறம்தன்னைப்பூட்டி போகுதுஉடல்கருகி
பூணிர்தத்தாலே மேட்டி

(முடுக்கு) எங்கள்குல தெய்வமே வாடி
யின்பசுகந்தருவாய் கூடி
சங்கையுடன்செய்வது மோடி
தகுமோயிதுபேசுவா யோடி
மங்கைக்கரசியே மானே
மகிழும்பிரகாசம் தேனே
உங்கள்குலம்மாவதும் தானே
உலகம்தனைக்காற்பவள் கோனே
ஒப்பிடும்செப்பிடும் உகந்தனைகைப்பட (சித்திரப்)

மன்னன் துரியன் மகள்மாது
சுயம்வரம் சாட்டவந்த தூதுவனைக்கும்
அரியநிருபம்காட்ட அன்னமேநான் இங்குவந்தேன்
அவள்தனை மாலை சூட்ட
அன்பாளன்குலதெய்வம் குறுக்காவந்தனைக்காட்ட

(முடுக்கு) பண்ணுமதன்கணை தாங்கிடவே
பாரையோசான்துயர் நீங்கிடவே

உன்னிதமாயெதிற் றேங்கிடவே
உள்ளமுறுகியே தேங்கிடவே
இன்னம் தயவில்லையோ
நல்ல இன்பமொழி நீயுமேசொல்ல
வன்னமாமதன் தன்னையே
வெல்லமதியோ ரதியோ
உன் மனம் கல்லோ
வச்சிரபச்சை உச்சமிழைத்த
சித்திரபதுமைப்போலே யெத்தனை சோதி (சித்திர)

சாம்புவ்தேவன் — விருத்தம்.

கோடிமின்னிடையினாளே கொஞ்சியேபஞ்சவர்னம்
வடிவானகிளியேயொத்த மருமொழிவாய்திறந்து
அடியேனிபேசொண்ணாதோ அன்னமே ஊரும்பேரும்
கடிகியேஎந்தனுக்கு கன்னியேயுரைசெய்வாயே.

சாம்புவதேவன் — வசனம்.

கேளும் பெண்ணே சோதிப்ரகாசமானமின்னலுக்கொப்பான இடையினையுடைய பஞ்சவர்னக்கிளியே உன்வாயைத்திறந்துமருஉத்தாரம் சொல்லக்கூடாதோ என்மீதில்கொஞ்சம் தயவுசெய்துஉன்னுடையஊரும்பேரும் உன்தாய் தகப்பன்பேரும் எனக்குதெரியும்படியாக சொல்லவேண்டும் பெண்ணே.

லக்ஷ்மணாதேவி — விருத்தம்.

சோமசுந்திரனேகேளாய் துலங்கிய துரியராஜன்
மாமகளென்றெண்ணாமல் வந்தெதிராகநின்று
காமசன்னதமேகொண்டு உன்கருத்தையும்மறித்துவீணாய்
நீமதிகலங்கிப்பேசும் நிருபனேயேகுவாயே.

வசனம்.

கேளும் ராசகுமாரகா உலகமெங்கும் பிரகாசித்திருக்கும்குருகுலத்தில்வந்துதித்த துரியோதனமகாராசன் தவப்புத்திரியாளான லக்ஷ்சுமணாதேவியென்று சொல்லுவார்கள் அதைப்பாராமல் என்னெதிராகநின்று காமசன்னதம்கொண்டுமதம்கொண்டவனைப்போல்கழுத்தழிந்து நிற்கவேண்டாம் அப்புறம்போம் ராசகுமாரனே.

சாம்புவதேவன் தர்க்கம்—தரு.

மானேமனமகிழ்ந்துமே நான்வந்தேனுந்தனைத்தேடி
மானே தேனே துவாரககிஷ்ணதேவர்
மைந்தன் நான் தாண்டி
முடுக்கு தெள்ளுமணியே உன்னைகொள்ள
முறையெனக்கு உள்ளம்மகிழ்ந்து
நான்கள்ளம் செய்திடவந்தேன் மானே

லக்ஷ்மணாதேவி தர்க்கம்—தரு.

என்னுவார்த்தைகள் பேசுராய்
ராஜகுமாராயிரு உனக்கடுக்குமோ
என்னாலேநீயடியனுமுதிய விதிப்படியே
முடுக்கு இடர்கள்வந்து தொடர்வது முன்னமே
எட்டநடுவும்வதைபட்டிட விதியோ என்னு

சாம்புவதேவன்—தரு.

ஆசைக்குகந்த நாயகி
உன்னைப்பிரிய மன்மவருமோ ஆசைக்
தேசமெங்குமங்கும் நீரனென்றறியாமல்
முடுக்கு சிக்கினபோதே பக்குவம்சொல்லடி
மூர்ச்சிக்கிறாய் மனம் கூசுவதுண்டோபோடி ஆசை

லக்ஷ்மணாதேவி—தரு.

மேலானவீரம் பேசுநீர்
எனக்கெதிரில்லே யென்றுமே மேலா
சீலாயிதென்னு புத்திசேதியழிந்திடாமல்
முடுக்கு சிந்தைகலங்கிய வந்துமே தவிக்குநீர்
தந்தைதாய் இலங்க
கொந்திடவிதியோ மேலான

சாம்புவதேவன்.

கொச்சகம்.

மானே மறகதமே மாங்குயிலே பூங்கிளியே தேனே
மதன் சரத்தால் தேகமெங்கும் கருகுதடி நானே
மணம் புரிந்து நல்ல சுகம் தந்திடுவேன் மீனே
விழியணங்கே மெல்லியரே என்பின்னே வருவாய்.

சாம்புவன்—வசனம்.

கேளும்பெண்ணே மதனரஞ்சிதமே உன்னைக்கண்ட போதே எனக்காலுல் மன்மத விகாரம் மிஞ்சுகிறது என்றிரேகமானதுகளை ந்துபோகிறது என்பின்னாலே வந்தாயேயானால் உன்னைமணம்செய்துகொண்டுபோகிறேன் இவ்வேளை என்னைமருவிகூடி விளையாடிநீ என்பு என்பின்னே வருவாய் பெண்ணே.

லக்ஷ்மணாதேவிக்கும்.

சாம்புவனுக்கும் தர்க்கம் தரு.

பின்னாலே நான் வரவோ
மன்னுபேசுவது நீரமோ
மன்னமன்னவர்கள் மண்டலாதிபதிவந்து
பணிந்திடும்தந்தைமார் பந்தவை
(முடுக்கு) மறியாமலே துதிசெய்திட
தடியோகெடுமெதியோவிது (பின்னு)

சாம்புவன்—தரு.

பாவையே ரஞ்சிதமே
பெண்ணேபச்சை பசுங்கிளியே

தேவர்பணிந்திடும் சிகரன்மாயவன்
சிந்தைமகிழ்ந்திடும் மைந்தனென்றெண்ணாமல்
(முடுக்கு) திடமாமொழி விடவேயிது
அடவோகெதி படவோ ததிபாவையே

லக்ஷ்மணதேவி—தரு.

கத்தவித்தைகள் போமோ
சுவாமி கள்ளத்தனமாமே
சுத்தாயித்தியம் கொண்டவரைப்போலே
சோதிக்கவேயென்னை வாதிக்கவந்தீரே
(முடுக்கு) சுகமாமொழி வெகுவாகுமோ
வெகுவாகுமோ தகுமோஇது (கத்தவி)

சாம்புவன்—தரு.

கொஞ்சிமகிழ்ந்திடவா யென்னோடி
சுகம்தருவாய் அந்தவதாமுண்டோ
யாருக்குநானினி அட்டிசெய்தாலுன்னை
விட்டு விடுவேனோ
(முடுக்கு) அரியாமலே பரிவந்திட
சரியாவதுநீதியோ அது (கொஞ்சி)

லக்ஷ்மணதேவி—தரு.

சொல்லவாகுமோ நாவால் நல்லதல்லவேயிது
நாடுசிரிக்குமேராஜனே ஓய்ராஜனே (சொல்ல)

சாம்புவன்—தரு.

சொல்லச்சொல்லவேயிது நல்லதல்லடிபெண்ணே
ஞாயமகியாயோடி பெண்ணே
அடிக்கண்ணே (சொல்ல)

லக்ஷ்மணதேவி—தரு.

அறிவதென்னமோ உங்களப்பன்
ஆடுமாடுகள் மேய்த்தார்
ஆமையியாரோ ஓய்ராசனே (அறிவ)

சாம்புவன்.

என்னைப்போலவே நீங்கள்மன்னமன்னவருமீரோ
பிள்ளைக்காரமாகடி பெண்ணே
அடிக்கண்ணே (என்னைப்)

லக்ஷ்மணதேவி.

வந்தார் இடைச்சாதியில் சொந்தார்கைம்பெண்
மந்தாலேவையகம் மரியாதோ
ஓய்ராஜனே (வந்தார்)

சாம்புவன்.

கைம்பெண்ஜாதி யால்வந்தஜாதி
உங்கள்ஜாதியடி அந்தநால்வரி
நீயல்லவோபெண்ணே அடிக்கண்ணே (கைம்)

லக்ஷ்மணதேவி.

எப்போதும் தப்படிப்பார்
உங்களப்பன்தாதநல்லவே என்னைமிரட்ட
வேண்டாம்ராஜனே (எப்போது)

சாம்புவன்.

கும்பல்தனங்கள்ரெண்டும் வம்புசெய்யாமல்தாரும்
கூடியணைவாயடி பெண்ணே அடிக்கண்ணே (கும்பல்)

லக்ஷ்மணதேவி.

இடையர் புத்தியைக்காட்டி
மடையத்தனமாய் நீட்டி
என்கிட்டேவருதே ராஜனே (இடைய)

லட்சுமணதேவி—கந்தார்த்தம்.

இடறதுபேசவேண்டாம் எனக்குமோசயம்சாட்டித்து
அடவிடன்மன்னர்வந்த அவர்களைமதித்திடாமல்
தூடமவும்இந்தசேதி துரைமக்கள்அறிந்தாலிங்கே
இடறதுவந்துநேரும் யிட்சணம்யேகுவீரே.

தரு.

அதம்செய்யநேரும் இப்பவேபோரவிதம்
கொண்டுபோரும் மதம்கொண்மேடுந்தவர்
மண்ணில் அனேகருண்டு
இதங்காது யென்மனம்
என்வீணாய்பாதைக்கிறீர் (அதம்செய்)

சாம்புவன்-சுந்தார்த்தம்.

கெட்டியாபேசவந்தாய் கெம்பீரவதியேயுன்னை
கிட்டியேவாரித்தூக்கி கிளம்பியேரதத்தைநாடி.
அட்டியில்லாமல்யாரும் அழகியரதத்திலேறி
இட்டனபரியைத்தட்டி தெரிவையும்புலம்பலானாள்.

தரு.

தோரறுட — அதிவேகமாய்
சீரதிசாட — தாரணிமன்னரும்
தடுத்தாலும் — எனைவந்து
சிறணியேயுன்னை திருப்புவதுமுண்டோ — (தோரது)

பொது—வசனம்.

இவ்விதமாக சாம்புவதேவன்யனேகதற்கம் செய்துமுடியாமல்பலவந்தமாக தூக்கி ரதத்திலவைத்துக்கொண்டு நடக்கிறபோது லக்ஷ்மணாதேவி புலம்புகிறவிதம் காண்க.

லக்ஷ்மணாதேவி—விருத்தம்.

மன்னமன்னவர்களெல்லாம் வந்துமேதுரியராசன்
தன்னிடமகளென்றெண்ணி சந்துமேஅஞ்சிடாமல்
என்னையும்ரதத்திலேற்றி யேகிறான்சோறங்கமாக
அன்னீதஞ்செய்தசாம்பன் அன்பிதோஅறிகிலேனே.

லக்ஷ்மணாதேவி—புலம்பல்—தரு.

அய்யோதிருவுளமே — மெய்யும்பதருணையோ
அவதிக்கின்றுசெய்வேன் — மகாதேவா
மைவிழிமாதர் சூழவந்து — பூங்காவனத்திற்
(முடுக்கு) வாசவமைந்தனும் — பாசமுடனேவந்து
மோசபுங்க — முடையா
ரேசம்கொண்டிட்டேவ — (அய்யோ)

அவ்திருபுரியையாளும் — அரன்தனக்குமிக்க
அருமையாபெண்பிறந்தேன் — மகாதேவா
என்சொல்சவராமல் தந்தை — எனக்குசுயம்
சாட்டி — ஹார்
(முடுக்கு) துஷ்டனமாவந்து — பசுவியாகனமைந்தன்
இட்டம்கொண்டே — யிந்த
கட்டமுண்டாச்சதே — (அய்யோ)

மங்கைஎனத்திருட — எங்கேமரிந்தெனக்கு
மாருபங்கம்வந்ததே — மகாதேவா
சங்கையாகியமனம் — தவிக்கவிதியாச்சுதே
(முடுக்கு) சாடவேபரிகளும் — ஓடவே
றதமநுயாடிய — பாடியபாதனே
வாடவும் தகுமோ — அய்யோ
இந்தக்கீர்த்தி — தாறோ
வந்துப்பிறந்தேன் — பாவிஎன்று
செய்குவேனய்யோ — மகாதேவா
தந்தைதாயிபந்துகள் — தவிக்கவிதிவந்ததோ
(முடுக்கு) தடுத்துரதத்தை — நீவிடுத்துவிடு.
யெந்தனையடித்திட பரிகுவதெப்படியோ இனி (அய்யோ)

சாம்புவன்—வசனம்.

இந்தப்பிரகாரமாக லட்சுமணாதேவி புலம்பிக்கொண்டுவர அப்போசாம்புவதேவன் அதிகவேகமாக ரதத்தைநடத்துகிறவிதம்எப்படியென்றால்.



சாம்புவதேவன் ரதம்விடுகிற தரு.

சந்தோஷமாகரதம் — விட்டான்
சாம்புவதேவனும் தன்னிடமனதில் — (சந்தோஷ)

அந்தமுள்ள அந்திபுரமாளும்
அயலத்தநசன் மகளை
சிறையெடுத்துக்கொண்டு (சந்தோஷமாக)
அஸ்தினாபுரிநகரைத் தாண்டி
ஆறுகுளம் காடுசெடி
வனத்தமும் கடந்து
வில்தாரமோகவே பாடி
பெல்லையை சிறையெடுத்துவேகமுடன்போக (சந்தோஷ)
துவாரகாபுரிநகரை நோக்கி
வெகுதூரிதமுடன் சவுக்கதாலே
புரவிகளை சாடி
காவலர்கள் வருமுன்னே
முடிகிரீசாம்புவனும் கடிகிட்டந்தானே (சந்தோஷ)

பொது—வசனம்.

இந்தப்பிரகாரமாக சாம்புவதேவன் லக்ஷ்மணாதேவியை ரதத்தில்யேற்றிக்கொண்டு போகிறசேதியை தாதிமார்கள் துரியோதனனுக்கு தெரிவிக்கிறவிதம் எப்படி யென்றால்.

தாதி—வசனம்.

சரணம் சரணமையா சுவாமி எங்கள் அரசியாகிய லக்ஷ்மணாதேவியும் நாங்களும் பூங்காவனத்தில் யின்று விளையாடிக்கொண்டிருக்கும்போது துவாரகாபுரிவாசனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திபட்டபுஸ்திரீகுமாரனை சாம்புவதேவன் பலவந்தமாக லக்ஷ்மணாதேவியை தேரிலேற்றிக்கொண்டு போய்விட்டானையா சுவாமி.

துரியன்—விருத்தம்.

ஒருமனதாகவோடிவந்துரைத்தசேதி
இருசெவிதனில்நாராசம்சொருகிவிட்டதுபோல்யேங்கி
அருமையாளனக்குதித்த அய்அய்யோமகளேயென்று
தருமுடிதுரியராசன் தயங்கியேபுலம்புவானே.

துரியன்-புலம்பல்-தரு.

அய்யோநானென்ன செய்குவேன்
எந்தன் அருமைமகளுக் கிந்த
குறைவுவந்ததடைய (அய்யோ)
ஒய்யாரமானக் கண்ணே
உனக்குசுயம்வரம் சாட்டி

(முடுக்கு) ஓடியுலகமெங்கும் தேடிவரச்சொல்ல
கோடிகோடியாய்மன்னர் ஓடிவந்திறங்கிட (அய்யோ)
கண்ணேநான் யென்னசெய்வேன்
நல்லகந்தமும் பெரிய
சுந்திரவடிவுள்ள (கண்ணே)
மண்ணிலொருவருக்கும் மகிழ்ந்துதந்திடும்முன்னே
(முடுக்கு) யாதவனிடையன் மகன்தானே
யுனையெடுத்துபோன விதிக்
கெட்டபடிநானெப்படி துணிவேன் (கண்ணே)
பொன்னேபூங்கிளி மயிலே
உன்னைப்பிடித்துக் கொண்டு
ரதம்நடத்திடவிதியோ பெண்ணே
பூமியிலொருவருக்கு புகழ்ந்துகொடுக்குமுன்னே
(முடுக்கு) போருமுடிந்து மனம்
சீராதவிக்கு தையோ
வாராஇப்படிக்கொத்த நேராபங்கம்
வந்ததே (பொன்னே)
மாமாசகுனிக் கர்ணனே
இனிவந்தநே நமக்குபங்கம்
சிந்தைகலங்கிடவே (மாமாசகுனி)
பூமாதவமிருந்துபெருமைமிகுத்த கண்ணே
(முடுக்கு) போராமுடிந்துமனம் சீராதவிக்குதையோ
யாருலேயாகுமிந்த அய்யோவிதியடக்க (மாமாசகுனி)

துரியன்-விருத்தம்.

என்னுடையசகோதரரே சகுனிகர்ணா
இடக்குலத்தில் வந்துதித்தமாயன்மைந்தன்
தந்தைமதிக்குரியதாகவந்த பையல்
தரணிபதிநான் அகம்மை மதித்திடாமல்
வந்துயென்தன்செல்விதனைத் திருடிப்போன
வல்லமையைக்கண்டுநான் அறியவேண்டும்
சொந்தமுடன்படையெடுத்து சண்டைக்கேகி
செல்லுவோம் நாமவனைவெல்லுவோமே.

தூரியன்—வசனம்.

வாருங் கர்வயகாராசனே மாமா சகுனி வெண்ணே திருடிகள் ளனென்னும் உலகமெல்லாம் பேர்படைத்தவனுடைய பிள்ளைக்கி இப்படிப்பட்ட திருட்டுப்புத்தி சேரிட்டுதுபார்த்தியா கொஞ்சமாவ து அச்சம் பயம் இல்லாமற்படிக்கு நம்மையும் மதிக்காமல் நமதுபுத் திரியை கள்ளம்செய்துக்கொண்டுபோன பையலே உடனேபின்னு லேபோய் அவனைப்பிடித்து தேர்க்காலில்கட்டிக்கொண்டுவந்துசிறை சாலையில் அடைக்கவேண்டும் என்பின்னாலே வாருங்கள் இராசாதி பதிகளே.

தூரியன் சாம்புவனைபிடிக்கப்போகிற—தரு.

அண்டரெண்டமும் நடுநடுங்க
 படையை காட்டுவேன்
அடிபிலேசிஅவனையும்மொரு நொடியில்மாட்டுவேன்
 கண்டுமவனைகசகசைக்கியே காத்தில்தூத்துவேன்
காலனுக்கிரையாக அவனைக்கண்டால்மோதுவேன்
 தந்தைமதியை கொண்டுவந்த
தருதலைப்பயிலே சதைசதையாபிச்சியெறிவேன்
 நயந்துபெண்ணை எந்தமதியால்
அறவெகுணத்திலே யெடுத்துத்துணிந்தானே
 யீரேழுலகம்நடுநடுங்குமே என்பேர்சொல்லவே
குலத்துவண்மையை பாராதமல்
 குதித்து வந்தானே
கொஞ்சமாகிலும் பயமில்லாமல்
 பெண்ணையெடுத் தானே
சலத்திலோடி பதுங்கினாலும் நான்விடுவேனோ
 அவன்தந்தையோடி வந்தபோதிலும்
சமர்த்துவெல்லுமோ சகுனிமாமா
 தம்பிமாரேசனுடில் வாருங்கள்
தனியாகதத்தைமுடிக்கிகொண்டு போருங்பாருங்கள்
 அவனைதருந்தசிஷ்டைசெய்திடாமல் யான்விடுவேனோ
சண்டைசெய்யவேண்டும் நீங்கள்
 நின்றுபாருங்கள் (அண்டரண்ட)

தூரியோதனன்—விருத்தம்.

வஞ்சியைதிருடிக்கொண்டு மகிழ்வாய்த்தேரைவிட்டு
அஞ்சியேயோடினாலும் யாருயிர்பிழைப்பதுண்டோ

[illegible]யபயிலேஉன்னை வில்லினால்தொருநொடிக்குள்
உருசபஞ்சாகவாட்டி பகைமுடித்திடுவேன்பாராய்.

வசனம்.

அடாவாடா பயிலேமண்டலாதிபதி என்னும் சற்றாகிலும் பய மில்லாமல் பெண்ணைத் திருடிக்கொண்டுபோருய் யல்லவா நீ எங் களைக்கண்டு தேரைவிட்டு கீழேகுதித்தோடினாலும் பிழைப்பதுண் டோ உன்னை ஒருநொடியில் பஞ்சுபோலவே பறக்கடிக்கிறேன் பாரடா பயிலே.

தூரியனுக்கும் சாம்புவதேவனுக்கும்

சண்டை சாம்புவன் தரு.

இலங்கைராவணன் சேனைபோல்வந்தாய்
மிஞ்சியவனியவகல்லநானு மதத்து
அஞ்சிட்டுனங்களைபொடிபட வாட்டுவேன்
சவுரியபுஜபலங் காட்டுவேன்
(புடுக்கு) கண்டனைசெய்யவே கண்டுமே
 பெண்ணைகொண்டுபோ தனுநமும்
 மண்டலமதியே (இலங்கை)

துரியன் - தரு.

இடைகுலத்திலே வந்திடும்
நீசிறப் பய்யலே
எடுக்கவந்தயோகுரு குலமணிதைய்யலே

(முடுக்கு) துடிக்கஉன் தலைசாடுவேன்
துண்டித்தே உயிர்போக்குவேன்
சுக்கசுக்க லாகவே யுன்
தலைதக்கவே யுன்றிறம்
திக்கிட செய்குவேன் (இடைகுலத்தி)

சாம்புவன் — தரு.

மதிகுலத்தினில்வந்திடும் மகிபதிராசனே
வல்லமைதன்னை யெண்ணியேபாரும் உன்போரசனே
குடிக்கஉன் தலை சாடுவேன்
கொடியதுண்டமாய் போடுவேன்

(முடுக்கு) குஞ்சரபரிமள மிஞ்சியரதமுடன்
பஞ்சுபஞ் சாகவே
மிஞ்சியடிக்கிறேன் (மதிகுலத்தினில்)

துரியன்.

தடுத்திடுமென்னிடசவுரிய புசபலம்கண்டிடே
சற்றுமஞ் சாமலே
தந்தைபுத்திரியை கொண்டுமே
நகைக்கருபியை எடுத்துமே
காமனுக்கேயுயிர் கொடுக்கவே

(முடுக்கு) கடுங்கவே தேவருமே
கொடுங்களை பூட்டிய
ஒடுக்கவேயுன்மதம் யடக்கிடவிடுத்தேன் (தடுத்து)

சாம்புவன் விருத்தம்.

பதுமரியாமல்மிக்க பலமுள்ளராசதிர
இரதகச்துரகமுள்ளராறுவம் தன்னைகூட்டி
இதமறியாமல்வந்து எதுத்திடும்படைகளெல்லாம்
அதமதுசெய்வேனென்று யறிந்துமேயெதுவாயே.

வசனம்.

அகோவாருங்கோள் இராசர்களே ஏதுநீங்கள் என்னுடைய பலமரியாமல்படிக்கி சேனைகளைக்கூட்டிக்கொண்டுவந்து எதிர்த்தா யல்லவா இவர்களையெல்லாம் அதம்செய்யப்பட்ட வல்லவனென்று அரிந்து நீங்கள்விலகிபிழையுங்கோள் ராசர்களே.

துரியன் சாம்புவன் தர்க்கம்.

துரியன் தரு.

பெண்ணைகன்னம் செய்வதேதடா
என்குலமும்கெட்டு நலமதுகொண்டுமே
பேசவந்ததென்ன வாதடா
அண்டபுவனமெல்லாம் யரியாயோ எங்கள்வீறம்
கண்டறிந்து இடப்புத்தியை
காட்டிகுதிக்காதே சும்மா

(முடுக்கு) காட்டுவானே திறம்பூட்டுவேனேசாம்
கண்டதுண்டமுட தெண்டினைசெய்வேன் (பெண்ணை)

சாம்புவன் தரு.

என்குலத்தை என்னைப்பார்க்கவே
அதுநேரமில்லாமலே கூடவுமெளிதாய் (என்குல)

என்குலத்தின்பழுதை எடுத்துச்சொல்லியகாலை
இழுக்குஇருதுண்டாய் யழிதது அறுத்தெரிவேன்

(முடுக்கு) எடுத்திடுவேன் சிலைமுரித்திடுவேன்
இருக்கியொடுக்கி சதம்முடிக்கினேபாரும் (என்குல)

சூரியன்.

மாட்டுக்கார பையலல்லவோ நீ
எவர்களும் மரியவே
சவுரியம்பேசிவந்து சொல்ல
வெட்க மில்லையோ
காட்டுக்கதிகாரந் சொல்லும்
ராசராசேந்திரனென்றும் ராச்சியம்மரியாதோ
சாட்சிசொல்லவும் வேண்டுமோ
(முடுக்கு) தாக்குவேன் பாணம்நீக்குவேன்
சினம்தட்டிகிட்டியே வெட்டியேஎரிவேன் (மாட்டுக்)

சாம்புவன்.

அத்தர்சித்தர் தேவரஞ்சவே
வந்திடும்அரிதிருமக்க ளென்றுமே
அறியாமல்வார்த்தை மிஞ்சவே
சித்தமதுதத்தளிக்க சினம்கொண்டேன்
உக்கிரமாகசத்தக்கடல் சூழுமிந்த
தாரணியெங்கும் நடுங்க
(முடுக்கு) தாக்குவேன் அதமாக்குவேனே
சத்ததன்னையும் கொடியிலிலடிபட (அத்தர்)

சூரியன் விருத்தம்.

கெட்டியாபேசவந்தவன்கெருவத்தை யடக்கவேண்டி
கொட்டியேசறங்கள்கோடி கொடியிடைவிருதுஎல்லாம்

வெட்டியேசாயத்தள்ளி வெகுண்டுமேபயலேஉன்னை
கட்டியேபிடித்துக்கொண்டேன் கடும்சிறைபோடத்தானே.

வசனம்.

அடாவாடா பயிலே என்னைமதியாமல் மகாதயிரியமாகப்பேச வந்தாய் என்று சாம்புவதேவனைப்பிடித்து கொடிக்கம்பத்தில் கட்டிக்கொண்டு போகும்போது சாம்புவன் புலம்புகிற விதம்காண்க

சாம்புவதேவன் புலம்பல்தரு.

இந்தவிதிஎனக்கு வந்ததே
மகாதேவர பிசாசர்வேசா
நான்என்ன செய்வேன்
இந்தசூரிய ராசன்
தந்தபெண்ணுக் கிச்சையாகி
தண்டுடனரசன் வந்து
என்னைகட்டிபிடிக்க விதியே (இந்தவி)

சூரியன்—தரு.

(முடுக்கு) பெண்ணைத்திருட வந்தாய்
மெள்ளவே யிவனை
பிடித்துக்கட்டிக் கொண்டு
தள்ளவே எங்கும்விள்ளவே
சிறைக் குள்ளவே
மண்ணைக்கவ்விக் கொள்ளவே
செவ்வையாய்கட்டுக்கோள் (பெண்ணைத்தி)

சாம்புவன்.

அடித்ததில்லையே எந்தன்
அருமைதாய் தந்தையும்
அடிப்பட விதியாச்சே
என்னசெய் வேன்
ஆசாபாசமிஞ்சி பெண்ணை
நேசமாகி காமெடுக்க
தேசமெல்லாம்நகைக்க வந்த
நீயினக்கி என்னசெய்வேன் (அடித்த)

துரியன்.

அதிவீரசூரரே   கட்டுங்கோள்
யவனையசையாமல்   பின்கட்டாய்க்கட்டுங்கோள்
யோங்கிரெட்டுங்   கோள்
சும்மாதிட்டுங்   கோள்
வாளால்வெட்டுங்   கோள்
செட்டிசெட்டியே   சிறையிட்டுமே
வையுங்கோள்   (அதிவீரசூ)

பொது—வசனம்.

இந்தப்பிரகாரமாக துரியோதனன் சாம்புவதேவனை சிறையில் வைத்துஇருக்கும்போது அப்போ துவாரகாபுரிவாசவராகிய ஸ்ரீகிஷ்ண்மூர்த்தி கொலுவுக்குவருகிற விதம் எப்படியென்றால்.

கிருஷ்ணமூர்த்திகொலு-விருத்தம்.

வேதனும்மாயநீந்து விண்ணவற்கமுதுதந்த
மாயவன்கமலக்கண்ணன் வையகமுண்டநாதன்
ஆதரவானசோதி அலைகடல்அயர்ந்தமூர்த்தி
சீதரமாயகிஷ்ண தேவரும்வருகின்றாரே.

கிருஷ்ணன் தரு.

பாற்கடல்   ஆலிலைமேற்
பள்ளிக்கொண்   டருளியே
பச்சைமேனியனும்   நானே
திருலோகமிஞ்சிய   பகர்த்தரெக்ஷகனானே
போற்கஞ்சா   சூரர்களை,
போங்குமதம்   மழித்தேன்
புவியில்லென்னைப்   பழித்த
இரணியனைக்   கிழித்தேன்
பூமியை   உண்டேன்
செசந்தமாமனை   கொன்றேன்
(முடுக்கு) காமுகஞ்சிய   ராமனும்மானேன்
பூமியளந்திடவாமனமானேன்   (பாற்கடல்)
பஞ்சாயுதம்   தரித்து
மிஞ்சியெனைப்போல்   வந்த
பவுண்டிகனையும்   மடித்தேன்
பூதகிபாலை   அவண்டவன்போலே குடித்தேன்

கஞ்சன்வற   விடுத்த
குஞ்சரத்தை   கெடுத்தேன்
கன்றைஎடுத்துவிளாங்கனி   யுதிறதடித்தேன்
கண்டவறஞ்ச   கெடிகொண்டவர்மிஞ்ச
(முடுக்கு) அண்டரெண்டமும்   குக்ஷியில்கொண்டுமே
தொண்டர்கள் தீவினை   இன்றுமே
தீர்த்தேன்   (பாற்கடல்)

உரியில் தயிர்பால்   வெண்ணை
பரிவாய்மனம்   களித்தேன்
யுண்டுமனையை   யளித்தேன்
கோவலைமாதரை   கண்டு
இன்பமும்   கொடுத்தேன்
தூரியனுக்கு   நேமித்த
சுபத்திரையைத்   தடுத்தேன்
சொல்லும்   விசையனுக்கு
தந்திரத்தின்   ளளித்தேன்
சூதனும்நானே   செகநாதனும்நானே
(முடுக்கு) பாதகர்   தங்களை
வாதுடன்   வெல்லுவேன்
சாதகமன்னரே நீதியால்வெல்வேன்   (பாற்க)

மதுத்துவெகு   வீரர்கள்
எதுத்துவந்தோரை   யெல்லாம்
மண்ணிலரைய   தாக்கினேன்
அவராவியையழித்து   விண்ணிலுயிரைபோக்கினேன்
அதித்தகோலியனூரில்   சாலைநகரத்தில்வாசன்
துய்யவன்னிய   குலம்
இராங்கையன்தந்த   கேசன்
குத்தனு   கூலன்
யெங்கும்போர் பெற்றிடும்   பாலன்
(முடுக்கு) நத்தியே   என்பதம்
கற்றவர்கூற   மெத்தவேவறம்
பெற்றுமே வாழ்க.   (பாற்கடல்)

கிஷ்ணசாமிகொலுவு பொது-விருத்தம்,

மறைமுதலனைத்தும்வாழ்க மாநிலமெல்லாம்வாழ்க
நாரணிதனியிலன்பர் சதாகாலம்தழைத்துவாழ்க
முறைமுறையாகவந்த முடிமன்னர்பணிந்தருள
நாற்புகழ்தம்பிருழ சகலரும்கொலுவாகின்றோமே.

வசனம்.

கேளும் மாதவா ஆகமவேதபுராணசாஸ்திரமுதலானதும் உலக சாத்திரமும் சுபக்ஷேமம்பொருந்தி வாழ்க்கடவது என்தமையன்முதலான மஹாமன்னவரும் சூழும்படி கொலுதாகின்றோம் மாதவா.

பொது—வசனம்,

இந்தப்பிரகாரம் கிஷ்ணமூர்த்தியானவர் கொலுவாயிருக்க அப்போது நாரதர் மகாமுனிகிஷ்ணமூர்த்தியை காணும்படி கொலுவுக்கு வருகிற விதம்காண்க.

நாரதர்—விருத்தம்,

வேதனும்மனம்தளிக்க விளங்குவெண்ணீறும்பூசி
பாதகன்சிறையில்வைத்த பாலனைசாம்புவதேவன்
சேதியையுரைக்கவேண்டி இருந்தவாபுகையைநோக்கி
நாதனைகாண அன்பாய்நாரதர்வருகின்றாரே.

நாரதர் தரு.

நீண்டசடை முடிந்து
நெற்றியில்வெண்ணீ றணிந்து
தாண்டியே கடைநடந்து
தவமுனி வந்தார்

கைதனில்வீணையும் மேந்தி
காவிகாம்பரம் பூண்டு
கண்டவர்தனை துதிக்கும்
நாரதமாமுனி வந்தார்

செவியில்குழைத் துலங்க
சித்திரக்களபம் வீச
நவநீதமாயன் க்கம்
நாரதர் வந்தார்

பார்த்தகத் தூரியாசன்
பாலனைசிறையில்வைத்த சேதியை
யுரைக்க வேண்டி
சீக்கிரம வந்தார்

கிருஷ்ணன்—விருத்தம்.

நானிலம்மதிக்கவந்த நாரதமுனியேகேளாய்
வானிலந்தன்னைவிட்டு வலக்கையில்வீணையேந்தி
மானிலமன்னர்சூழ்ந்து மருவியசபைக்கிப்போது
தானுமேவந்தசேதி சங்கதியுரைசெய்வாயே.

வசனம்.

வாரும் நாரதமாமுனியே நீர்நமது சமுகந்தேடிவந்தசமாசாரம்தெரியும்படிசொல்லும் நாரதமுனிவரே.

நாரதர்—தரு.

வந்தசேதிதன்னைக் கேளையா
அரிவாசுதேவா (வந்தசேதி)

வந்தசேதிதன்னைக் கேளும்
சந்திரவம்மிஷத் தூரியன்
தந்தலக்ஷ்மணா தேவிக்கே
மன்னவர்சுயம்சாட்டினான் (வந்தசே)

தேசமன்னர் ஏறிய
தெரியகிருபம் காட்டி
ராசராசரும் வந்து
கவியகொடிநாட்டி தன்னைக்கேட்டு
நம்மிடமைந்தனும் வந்தசேதியறிய

(முடுக்கு) மதித்திடாமலே மாதுலக்ஷ்மணாதேவி
வாடிதவிக்கவே ஓடியெடுக்கவே
இரதத்திலேத்தி பூங்காவைக்கடந்தயே
நாடவும்சேதிவாடவும்கண்டு (வந்தசே)

குருகுலமன்னர் வந்து
கூடிப்பிடித்துக் கொண்டு
கொடிரதகம்பத்திலே கொண்டு
இருக்கிக் கட்டி

(முடுக்கு) கொண்டுபோய்புவனும் கண்டு
தவிக்கவுருகவே மனம்
சிறையிலடைக்க (வந்தசேதி)

நாரதர் வசனம்.

கேளுமையா சுவாமிபகவானே தாங்கள்குமாரனாகியசாம்புவதேவன் துரியோதனன் குமாரத்தியாகிய லக்ஷ்மணாதேவியைபூங்காவனத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது சாம்புவதேவன் யிரதத்திலேயேற்றிபோகவும் துரியோதனன்கண்டு பிடித்துரதகொடிக்கம்பத்தில் கட்டிக்கொண்டுபோய் சிறையிலடைத்தான்அந்தசேதியைதங்களுக்கு தெரிவிக்கும்படி வந்தேனையா சுவாமி.

கிருஷ்ணன் விருத்தம்.

இப்படிக்கிநாரதரும் கூறக்கேட்டு
இருவிழியும்பொறிப்பறக்க கோபமாகி
எப்படிக்கிஎன்மகனை சிறையில்வைப்பான்
எதிரிபலமறியானோ துரியன்தானும்
இப்பொழுதுநானுமே அவ்விடமேயேகி
எமனுலகம்அவனுயிரை யேகச்செய்வேன்
அப்படியாவென்றுசொல்லி கிருஷ்ணதேவர்
ஆக்கிரமித்துசிலவசனம் முரைக்கின்றாரே.

கிஷ்ணன்—தரு.

இத்தனிக்கெருவம் கொண்டானோ
பிடித்திட மைந்தனை
அடைத்திட சிறையில்
எங்கள்வீரியம் கண்டானோ
சத்தம்கேட்ட வுடனே
தனையனைவிட்ட லாச்சி
தடுத்தொரு வார்த்தைகள்
எடுத்துச்சொல்லப் போகுமோ

(முடுக்கு) சகலரு மரியவே
நகரையடிப் பேன்
அகமதி லெண்ணியே
பகையைநான்முடிப்பேன் (இத்தனை)

வல்லமையறிந்த இல்லையோ
பொடிபட கவுறவாள்

படைகளை வளைதக்க
எனக்கு தொல்லையோ
எல்லையில்லவை றென்றாலும்
எதிர்த்துப்போகவர றுண்டோ
இப்படி செய்யவும்
குலயினைபுத்தியைக் கொண்டு

(முடுக்கு) இருக்கியஅவனிட செறுக்கையழிப்பேன்
நெருக்கியபடை எல்லாம்
சரிக்கினிலொழிப்பேன் (இத்தனைக்)

பஞ்சவர்தமைப் பகைத்தவன்
நல்லகொடுமையில் மிகுதியைகெடுமதிகொண்டு
பாதகன்றுதில் மிகுத்தவன்
வஞ்சகனிவ னென்றுமே
வையகமறிந்த நாவ்டு
மதிக்கும் உலகமெய்கும்
அறிக்கஇப்பவே தன்டு

(முடுக்கு) மண்டியே அவனுடன்
சண்டை தொடுப்பேன்
என்டிசை நடுங்கவே
தண்டமெடுப்பேன் (இத்தனை)

தளசேகரத்தை கூட்டுவேன்
எதிர்வந் திடும்
படைகளைகிந்து சித்தாகவே
தடுத்துபோராடி வாட்டுவேன்
அளவில்லாதெடுங் கீர்த்தி
அழியஅதமாக்கு வேன்
அனைசேனைய னெல்லாம்
அல்லிபோட தாக்குவேன்

(முடுக்கு) அரியனை யாவும்
அரியனை கொல்வேன்
தெரியவ வெவரையும்
பதிவுடன்வெல்வேன் (இத்தனை)

கிஷ்ணன்—விருத்தம்,

நீடியஉலகமெய்கும் நிகரில்லாமாயனென்றும்
கொடியவன் அரியன்தன்னை கொஞ்சமும்மதித்திடாமல்
நொடியினிலவனைக்கொல்ல படைதனையெடுக்கவேண்டும்
வடிவானசாம்பவதிதன்னை விரைவுடன்வரச்செய்வாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய்மாதவி நீண்டயுலகாதியந்தமும்நிகரில்லாமாயனென்றும்பிறகாசிக்கும் தன்மையைகொஞ்சமாவதுளண்ணிப்பாருமல்அரியாதசிறுவனைசிறையில்வைத்திருக்கும் அரியோதிரன்மீது படையெடுத்துபோகவேண்டியதா யிருக்கிறது இந்தசேதியை தெரிவிக்கவேண்டியது அரண்மனையில் இருக்கும் என்தேவியாகிய சாம்புவதியை அழைத்துவாரும் பிள்ளாய் மாதவி.

பொது—வசனம்.

இந்தப்பிறகாரமாக கிஷ்ணமூர்த்தி தேவியாகிய சாம்புவதியம்மன் தன்னாயகனை காணும்படி சபையைநாடி கொலுவுக்கு வருகிற விதம்காண்க.

சாம்புவதி விருத்தம்.

அடவுடன்சகிமார்களோடி அறிவித்தசேதிக்கேட்டு
திடமுடன்எழுந்திருந்து சீர்பணியலங்கரித்து
நடனசல்லாபரூபி நாயகன்தன்னைக்காண
மடமயிலானசாம்புவதி யிதோவருகின்றாளே.

சாம்புவதி-தரு.

வந்தாள் சாம்புவதேவி
ஒய்யாரமாக வாறாள்
சாம்புவதேவிவந்தாள் சாம்புவதேவி
இந்திரதியோர் வணங்க
(முடுக்கு) வாசலதம்மதி நேசமுடன்வர
பாசமிகுத் திட
நேசவலங்காரி (வந்தாள்)

தங்கைசரிகைசேலை மின்ன
இடைவடி வாதரிக்க
ஒட்டியாணம் சோதிதன்னை
செங்கைகடகம் மின்ன
அங்கம்பளப ளென்ன
(முடுக்கு) சிருடனேவெகு நேருடனே
யொளிபேருட னெவரும்
கூறும்ராதியென்ன (வந்தா)

கொத்துமுத்தாக ளாடவே
நல்லகுடிய மாமலர்
கொண்டைவண்டிசை பாடவே
சத்தத்தண்ட கொலுசு
சுத்திக்கலக லென்ன
(முடுக்கு) தாறணிலேவெகு சிரணினன்ன
சிவககாரணிமெச்சிய வாரணியென்ன (வந்தா)

காடிக்காசன்தந்த வஞ்சி
கிறேதமரக்கனிவாய் கிளியெனவே
கொஞ்சிகிறிட மைத்துனனென
கெருடத்துவசக ராஜன்
(முடுக்கு) கேருமுடனெவரும் பாதமுடையவனும்
வானதயுடன்மகவ் சேறியைக்காண (வந்தா)

சாம்புவதி-விருத்தம்.

வந்தசாம்புவதியுமிங்கே மாயனுற்சமுகம்சென்று
சிந்தையில்மகிழ்வியாகி திருவடிதனில்பணிந்து

எந்தனையழைத்தசேதி இன்னதென்றறியவேண்டி
சந்தோஷமாகவேதான் சந்நிருடன்கேட்கின்றாளே

சாம்புவதி—வசனம்.

சரணம் சரணமையா சுவாமிபிராணநாயகரே தேவரீருடைய திருவடிபொற்பாத கமலங்களுக்கு அடியாள் அநேகவந்தனம். அடியாள் அரண்மனையில் இருந்தவென்னை ஏதுகாரியமாக இந்தசபைக்கி வரவழைத்தீர் தெரியும்படி திருவுளம்பற்றி யருளவேண்டும் கர்த்தபமே.

சாம்புவதி தர்க்கம் தரு

நாதாவேணு நீதா
அரி-அரி-பரந் தாமா
சீதாமனோகரனே புத்தன்
சிப்பாதமே யான்சரணம்

(முடுக்கு) சிந்தையி லங்பாக
எந்தனை யழைத்ததை
விந்தையா உரைசெய்வீர்
கந்தாகுருந்தகனே (நாதாவே)

கிஷ்ணன்—தரு.

மதியோ / சாம்பவதியே
பெண்ணை / மயிலே
கருங்குயிலே தாதியேயடு / ரதிபோலே
தலங்கரிக்க / பெருவாய்
(முடுக்கு) சோதியேமாமணி / நீதியே
உன்மகன் சேதி / கேட்டியோ
கோதிலா மணி / (மதியோசா)

சாம்புவதி.

கண்ணே பெக / வண்ணு
ஏவகாமி / ஏகோதரனே
கண்ணே மனாம் / குன்றுமலே
நாதா / கனியோகா
(முடுக்கு) நாட்டியேனக்குமே / காட்டியே
சேதியைகேட்டது / மில்லையோ
வாட்டமுடன் மன்று / (கண்ணு)

கிஷ்ணன்.

அரியன்பெண்ணை / பரிவாயோடி
அடுக்காமகன் / எடுக்க
பெரியமன்னர்தெரிக்குவந்து / பிடித்தார்
சிறையடைக் / தார்
(முடுக்கு) போதவாகவே / நாரதர்வந்துமே
சிறது / கூறவே
போரதுசெய்வேன் / (அரியன்)

சாம்புவதி—கொச்சகம்.

பாலர்பகங்கிளியோபஞ்சவர்ண ரஞ்சிதமே
மேலாதவம்புரிந்து வீரியனைப்பெற்றெடுத்தேன்
கோலாகாலம்கடத்தி கொற்றவரும்பற்றியுன்னை
சிலாசிறையில்வைக்கவிலஞ்செய்ததோ என்றுரைப்பேன்.

வசனம்.

அய்யோ என் செல்வக் கண்மணியே உன்னையநேகமாக தபம் செய்து பெற்றுவளர்த்தேனே பாவியாகிய துரியோதனனெவ்விதமாக அடித்து சிறையில்வைத்தானோ இனியென்ன செய்குவேனப்பா என்குமாரசெல்வமே.

சாம்புவதி புலப்பல் தரு.

பாசமாகவே / பெற்றுவளர்த்த
பாவிநான் / தவிக்க
மனம் / பதைக்க
தேசம் / நகைக்க
பாலனே / திவ்வியலோலனே
எந்தன்சீலனே / என்னவேலைகள்செய்தாயோ
கவுறவக்குல / துரியன்
பெண்ணைகண்டுநீ / எடுக்க
உடன்கடுக்க / மனம்பதைக்க
கட்டவோபாலா / இட்டவோ
என்னவென்று / கோஷ்டர்கள்
செய்தாயோடா / மகனே
இந்தவயதில / சிறையிருக்கவும்
எழுதின / விதியோ
யிதுசதியோ / நல்கைதியோ மகனே
எப்படி / உனக்கிப்படிவா
ஒப்பில்லா / பாலா
அப்பனே என்செய்வேன் / (பாசமாக)

வையகத்திலே / வேண்டிய
பெண்கள் / மகனே
இல்லையோவென்று / தொல்லையோ
குறைவில்லையோ / மகனே
மைந்தனேவெகு / சிந்தனை
இப்போவந்ததே என்செய்வேன் / (பாசமாக)

கிஷ்ணன்-விருத்தம்.

மைந்தனைக்குறித்து சாம்புவதியே நீபுலம்பவேண்டாம்
எந்தனைமதித்திடாமல்பிடர்செய்த துரியன்றனை
அந்தகன்பதியேசேர்ந்து அழகுள்ளமைந்தன்
சிந்தையும்மகிழச்செய்து சீக்கிரமழைக்குவேனே.

வசனம்,

